<u>அரக்கோணம் நகராட்சி</u>

<u>அவசர மன்ற கூட்ட அறிவிப்பு</u>

கூட்ட எண்.67 நாள்.11.12.2020.

பொருள் : அவசர மன்ற க்கூட்டம் – அரக்கோணம் நகராட்சி –
நாள் 11.12.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு
கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி 11.12.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அவசர மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் 40W குழல் விளக்குகள் கையடக்க குழல் விளக்குகள் (CFL) சோடியம் ஆவி விளக்குகள், மெட்டல் ஹாலாய்டு விளக்குகள், எனர்ஜி சேவர்பல்புகள்மற்றும் உயர்கோபுர மின் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளது. 2021–22 ஆண்டிற்கான மேற்கண்ட தெரு விளக்குகளின் பராமரிப்பு பணி மேற்கொள்ள மின் உதிரிபாகங்கள் வாங்க தோராய செலவினம் ரூ.8.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.**
**2) தெருவிளக்கு மற்றும் அதன் உதிரிபாகங்கள் அரக்கோணம் கூட்டுறவு சிறப்பங்காடியில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 1184 /2020/இ1**

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுடன் கூடிய கைப்பம்புகள் அவ்வப்போது பழுது ஏற்படுவதால் பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கைப்பம்பு உதிரிபாகங்கள் வாங்க வேண்டியுள்ளது. 2021–22 ஆம் ஆண்டிற்கான தோராய மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.**
**2) மேற்படி உதிரிபாகங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற டான்சி நிறுவனத்தில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 1185 /2020/இ1**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு தேவையான வால்வு ஆப்ரேட்டர் பணியாட்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் 2021–22 ஆம் ஆண்டிற்கு குடிநீர் பணி மற்றும் இதர பணிக்கு தேவையான ஆட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனுமதித்துள்ள விலைப்பட்டியலின்படி அனுமதித்துள்ள தொகைக்கு தேவைக்கேற்ப சப்ளை செய்யும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.910000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் . 1186 /இ1/2020**

**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளில் அவ்வப்போது ஏற்படும் குழாய் உடைப்புகள் மற்றும் பொதுக்குழாய் குடிநீர் இணைப்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய 2021–22 ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.990000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .1187/இ1/2020**

**பொருள் எண் :05**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.3292/2020//UGSS–1 நாள்.15.09.2020ல் தேதியிட்ட கடிதத்தில் அரக்கோணம் நகராட்சியின் பாதாள சாக்கடை திட்டப்பணிக்கான கழிவு நீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்கி சுத்தம் செய்ய Robotic Sewer Cleaning Machine கொள்முதல் செய்ய அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து, Robotic Sewer Cleaning Machine விநியோகம் செய்து மூன்று ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.100.00 இலட்சத்திற்கு திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற முன்மொழிவு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** **1. மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**2. மேற்படி Robotic Sewer Cleaning Machine விநியோகம் செய்து மூன்று ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான மதிப்பீடு தொகையினை 15–வது மத்திய மானிய குழு (15-Centeral Finance Commission) 2020–21ம் ஆண்டிற்கு அரக்கோணம் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் . 1911/இ1/2019**

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களு;ககான உரிமைக்காலம் 31.03.2021 உடன் முடிவடைவதால் 2021–2024 ஆண்டுகளின் அனுபோக உரிமைக்கு (01.04.2021 முதல் 31.03.2024 முடிய) முதலாம் ஆண்டு குத்தகை தொகையுடன் ஆண்டு ஒன்றுக்கு 5 சதவீதம் உயர்வு என்கின்ற நிபந்தனை அடிப்படையில் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அகியவைகளில் ஒப்படைப்பு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | குத்தகை இனம் | செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை ரூ.(வங்கி வரைவோலை) | (1.1.2021)ன்படி வட்டாட்சியரிடம் பெற வேண்டிய சால்வன்சி சான்று மதிப்பு ரூ. | சால்வன்சி பெறாதவர் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை ரூ. (வங்கி வரைவோலை) |
|---|---|---|---|---|
| 1. | பேருந்து நிலையத்தில் வரும் பேருந்துகளுக்கு தினசரி சுங்கம் வசூல் செய்யும் உரிமம் | 2,00,000/– | 5,00,000/– | 3,50,000/– |
| 2. | புதிய பேருந்து நிலைய பொது கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறை கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 30,000/– | 1,00,000/– | 50,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | ஆடு, மாடு அடிக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 10,000/– | 1,00,000/– | 20,000/– |
| 4. | நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 30,000/– | 1,00,000/– | 50,000/– |

மேற்கண்ட இனைங்களில் ஏல அறிக்கையினை உள்ளூர் அச்சகம் மூலம் தேவையான பிரதிகள் அச்சிட்டுக் கொள்ளவும் ஏல விபரத்தினை வேலூர் மாவட்ட ஆட்சி தலைவர், அலுவலக மக்கள் தொடர்பு அலுவலர் முலமாக ஒரு தினசரி தமிழ், நாளிதழ் மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் வெளியுடவும் இவை தொடர்பான அனைத்து விளம்பர செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்.**
**2) விளம்பர செலவினங்கட்கு மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 1042/அ1/2020**

**பொருள் எண் :07**

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை–28, அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.20557/2020/இ3 நாள்.15.12.2020ல் கடிதத்தின்படி அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-21-ன் கீழ் ரூ.400.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3 நாள்.11.12.2020ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| **நகராட்சியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்)** | **சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ.கோடியில்)** | **நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்)** |
|---|---|---|---|
| அரக்கோணம் | 4.00 | 3.60 | 0.40 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **சாலைகளின் நீளம்(கி.மீ)** | **சாலைகளின் அகலம் (மீ)** | **மதிப்பீடு தொகை (ரூ.இலட் சத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | **சிப்பம் –I** வார்டு எண்.01, ஜெய்பீம் நகர் பிரதான சாலை, 1–வது, 2–வது, 3–வது தெரு, வார்டு எண்.3 ராஜுவ் காந்தி நகர் பிரதான சாலை, 1–வது, 2–வது(அம்மன் கோயில் தெரு), வார்டு எண்.04 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் எச்ஐஜி குடியிருப்பு (New) தெருவிற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல். | 1.381 | 3.50 முதல் 5.00 வரை | 100.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | **<u>சிப்பம் –II</u>** வார்டு எண்.22 அன்னை கஸ்தூரி பாய் தெரு, வார்டு எண்.25 மற்றும் 26 என்.வி.என் தெரு, சி..என்.எ ராணியம்மாள் தெரு, ப உ சண்முகம் தெரு, மதியழகன் தெரு, அன்னை தெரசா தெருவிற்கு பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல். | 1.438 | 4.00 முதல் 4.50 வரை | 100.00 |
| 3 | **<u>சிப்பம் –III</u>** வார்டு எண்.03 கணேஷ் நகர் 12, 15–வது தெரு, கணேஷ் நகர் மெயின் ரோடு, வார்டு எண்.22 பாக்கியம்மாள் காலணி, கிரிசிங் நகர், கட்டபொம்மன் தெரு, கன்னியப்பன் தெரு, அம்பேத்கர் தெரு, காமராஜ் தெரு, வார்டு எண்.08 குறிஞ்சி நகர் குறுக்கு தெருவிற்கு தார் சாலைகள் அமைத்தல். | 1.980 | 4.00 முதல் 4.50 வரை | 100.00 |
| 4 | **<u>சிப்பம் –iv</u>** வார்டு எண்.25 சி.என்.எ ராணியம்மாள் தெரு, சிவபாதம் நகர் பிரதான சாலை, வார்டு எண்.26 மதியழகன் தெரு, என்.வி.என் தெரு, வார்டு எண்.31 லஷ்மி நகர், வார்டு எண்.32 தூர்கையம்மன் கோயில் தெரு, வார்டு எண்.04 கணேஷ் நகர் முதல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பாரதிதாசன் பள்ளி தெரு, வார்டு எண்.21 இஸ்மாயில் நகர் தெருவிற்கு தார் சாலைகள் அமைத்தல். | 1.957 | 4.00 முதல் 4.50 வரை | 100.00 |
| | **மொத்தம்** | **6.756** | | **400.00** |

**<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.998/2020/இ1)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**